




Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்



An Unit of the e magazine Voice of Jagadguru

# ஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மகாசன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்தர் மஹாஸ்வாமிஜி அவர்களின் 74வது வர்த்தந்தி




## ஸ்வர்ண பாரதீ மஹோத்சவம்
## சிறப்பு இதழ் 1

ஸ்ரீ ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு மஹா சமஸ்தானம் ஸ்ரீ சாரதா பீடம் சிருங்கேரி உத்தராதிகாரி சிஷ்ய ஸ்வீகார மஹோத்ஸவ ஆஹ்வான பத்திரிகை முதல் பிரதமபாஷணம் வரை (1974 ஸ்ரீ சிருங்கேரி சிஷ்ய ஸ்வீகார விசேஷ மலரில் இருந்து)


# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

ஞானத்தைப் பெற்று மோக்ஷத்தை அடையும்வரை, மனிதன் பல ஜன்மங்களை எடுத்துக்கொண்டே இருப்பான். அந்த ஜன்மங்களில் பூர்வ ஜன்ம வாஸனை தொடரும், கர்மங்களைச் செய்வான், கர்மபலன்களை அனுபவிப்பான். இவ்வாறு மீண்டும் மீண்டும் ஜனன மரணச் சக்கரம் சுற்றிக்கொண்டே இருக்கும். சற்று சிந்தித்துப் பார்த்தால் கட்டுப்பாடற்ற மனமே இதற்குக் காரணம் என்பது தெரிய வரும்.



थावदन्य न विन्देत व्यवधानेन कर्मणान्।
मन एव मनुष्येन्द्र भूतानां भवभावनम् ।।

தா²வத³ன்ய ந விந்தே³த வ்யவதா⁴னேன கர்மணான்|
மன ஏவ மனுஷ்யேந்த்³ர பூ⁴தானாம்’ ப⁴வபா⁴வனம் ||

இவ்வாறாக ஆத்மா உடலை ஏற்றுக் கொள்ளவும், விடவும் செய்கிறது. இதன் காரணமாக மகிழ்ச்சி, இன்பம், துன்பம், பயம், வருத்தம் போன்றவை உண்டாகின்றன.

अनेन पुरुषो देहानुपादत्ते विमुञ्चति।
हर्षं शोकं भयं दुःखं सुख चानेन विन्दति ।।
அனேன புருஷோ தே³ஹானுபாத³த்தே விமுஞ்சதி|
ஹர்ஷம்’ ஶோகம்’ ப⁴யம்’ து³:க²ம்’ ஸுக² சானேன விந்த³தி ||

இங்கு மனஸ் என்பது விஷய வாஸனை, பற்று, அதை ஒட்டிய கர்மாக்கள், அவற்றின் பலன்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். பற்றுதலுடன் கர்மாக்களைச் செய்தால் அவற்றின் பலனை அனுபவிக்க வேண்டி வரும். அதுவே புனர்ஜன்மத்திற்குக் காரணமாகிவிடும்.


यदा हि कर्मफलतृष्णाप्रयुक्त: कर्मणि  प्रवर्तते तदा कर्मफलस्य एव जन्मन: हेतु: भवेत् ।

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru

யதா³ ஹி கர்மப²லத்ரு’ஷ்ணாப்ரயுக்த: கர்மணி ப்ரவர்ததே ததா³ கர்மப²லஸ்ய ஏவ ஜன்மன: ஹேது: ப⁴வேத் |

என்று ஸ்ரீ ஆதி சங்கரர் தமது பாஷ்யத்தில் அழகாகக் கூறியிருக்கிறார். ஆகையால். மனிதன் கர்மத்தைச் செய்யும்பொழுது எந்தவிதமான பற்றுதலோ, பயமோ பலாபேடிையோ இல்லாமல் ஈச்வரார்ப்பணமாகச் செய்தால் மனஸும் தெளிவாகிவிடும். எல்லா நன்மைகளுக்கும் காரணமாக அமையும். இதை நன்றாகப் புரிந்துகொண்டு ஸத்கர்மத்தை ஈச்வரார்ப்பண புத்தியுடன் செய்துவர எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.



நன்றி - அம்மன் தரிசனம்

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அம்ருத துளிகள்

சாஸ்திரத்திலே “இந்த மாதிரி இருக்க வேண்டும், இந்த மாதிரி இருக்கக் கூடாது” என்று சொல்லி இருக்கிறது. இந்த விதி நிஷேதங்களை நாம் அனுஷ்டித்தால் நமக்குத்தான் சிரேயஸ் ஆகும். இதை உதாஸீனம் பண்ணினால் நமக்குத்தான் அசிரேயஸ், நாம் ஆசரிக்காமல் விட்டால் சாஸ்திரத்திற்கோ அல்லது சாஸ்திரத்தை உபதேசித்த ஈச்வரனுக்கோ ஒரு நஷ்டமும் இல்லை. அதே மாதிரி நாம் பள்ளியில் படிக்கிறோம். நம் ஆசிரியர், “நன்றாக படி, இந்த மாதிரி இருக்காதே; இந்த மாதிரி இரு” என்று சொல்லிய வண்ணம் செய்தால் நாம் பரீட்சையில் பாஸ் ஆகி அடுத்த வகுப்பிற்கு போவோம். அவர் சொன்ன மாதிரி செய்யவில்லையெனில் நாம் பரீக்ஷையில் ஃபெயில் ஆகி அங்கேயே உட்கார்ந்திருப்போம். நான் அவர் சொன்ன மாதிரி செய்தாலும் செய்யாவிட்டாலும் அவருக்கொன்றும் ஆகப்போவது இல்லை. அவருடைய காரியம் அவருக்கு நடந்து கொண்டே இருக்கிறது. அதேபோல், முன்னோர்கள் நமக்கு செய்த உபதேசங்கள் நம்முடைய சிரேயஸ்ஸிற்காக செய்த உபதேசங்களே ஆகும். அந்த உபதேசங்களை ஆசரிக்க வேண்டியது நமக்கு அவசியம்.

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru

# ஸ்ரீ ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு மஹா சமஸ்தானம் ஸ்ரீ சாரதா பீடம் சிருங்கேரி

## உத்தராதிகாரி சிஷ்ய ஸ்வீகார மஹோத்ஸவ ஆஹ்வான பத்திரிகை

ஸ்ரீ பரமசிவ அவதாரமான ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யார் கேரள தேசத்தில் பூர்ணா நதிக்கரையில் காலடி க்ஷேத்திரத்தில் அவதரித்தார்கள். பால்யத்திலேயே பிரம்மசர்யத்திலேயே சந்நியாச ஆஸ்ரமத்தை ஸ்வீகரித்தார்கள். தம் குருவானவரும் நர்மதாதீர வாசியுமான ஸ்ரீ கோவிந்த பகவத்பாதரின் ஆஞ்ஞையின்படி, பிரம்ஹஸூத்திரம், உப நிஷத்துகள் மற்றும் பகவத் கீதை இவைகளுக்கு ப்ரௌடமான பாஷ்யங்களை எழுதினார்கள்.

பாரத தேசத்தின் தென்கோடியான கன்யாகுமாரி முதல் வடகோடி- யின் சிகரமான காஷ்மீர் வரையிலும் மற்றும் நேபாளம் வரையிலும் இரு முறை சஞ்சரித்தார்கள். அக்காலத்தில் ஜனங்களுக்கு ஏற்பட்டிருந்த வேதவிருத்தமான அபிப்பிராயங்களைக் கண்டித்து வேத தர்மத்தை நிலை நிறுத்தினார்கள்

அவர் நிரூபித்த சித்தாந்தங்களை எக்காலங்களிலும் வளர்த்துவர தமது சிஷ்யர்களான ஸுரேஸ்வரர், பத்மபாதர், தோடகர், மற்றும் ஹஸ்தாமலகர், இவர்களை பாரதத்தின் நான்கு திசைகளிலும் ஸ்தாபித்த பீடங்களுக்கு அதிபதியாக நியமனம் செய்தார்கள்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் 32 வருட காலமே பூத உடலை வைத்திருந்தார் -கள். கடைசியில் ஹிமயமலை கேதார க்ஷேத்திரத்தில் அந்தர்த்தானமானார்.

இம் மகாத்மா தக்ஷிணாம்நாய ஸ்ரீ சாரதா பீடத்தை, புனிதமான துங்கா நதியின் தீரத்தில் புராண பிரசித்தமான விபாண்டக மஹரிஷி ஆஸ்ரமத்தின் அருகிலுள்ள ஸ்ரீ சிருங்ககிரி (சிருங்கேரி) க்ஷேத்திரத்தில் ஸ்தாபித்தார்கள். இப்பீடத்தின் அதிதேவதையான ஸ்ரீ சாரதா தேவியை ஸ்ரீசக்ரத்தில் ஆவாஹனம் செய்து ஸ்தாபித்தார்கள், ஸ்ரீ சுரேஸ்வராசார்யரை இப்பீடத்திற்கு அதிபதியாக நியமித்தார்கள். அது முதல் இன்றுவரை மேற்படி பீடத்தை உத்தமமான ஞான ஸம்பன்னர்களும், ஜிதேந்திரியர்களும், தர்மம் மற்றும் ஞானமார்க்கத்தைக் காப்பாற்றுபவர்களும் அலங்கரித்து வருகிறார்கள்.

தற்போது இப்பீடத்தை அலங்கரித்துவரும் ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹா ஸ்வாமிகள் சாஸ்திர பாரங்கதராயும், ஸதாசார ஸத்தர்மங்களை காப்பாற்றிக்கொண்டும், மடத்தின் கீர்த்தியை வளர்த்து வருவது யாவரும் அறிந்ததே. இவர் பாரதநாடு முழுவதும் யாத்திராடனம் செய்து சகல ஜனங்களின் மனதையும் ஆக்ரமித்திருக்கிறார்கள் என்பதும் தெரிந்த விஷயமே.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru

ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குரு மஹா ஸ்வாமிகள் தக்கதொரு சிஷ்யரைத் தேர்ந்தெடுத்து வைக்க ஸங்கல்பம் செய்து கொண்டார்கள். ஸ்ரீ சாரதா தேவியின் அனுக்கிரகத்தால் ஆந்திர பிரதேசத்தில் வேதமூர்த்தி வெங்கடேஸ்வர அவதானிகளின் ஸத்புத்திரரான ஸ்ரீ சீதாராம ஆஞ்ஜநேயலு என்னும் பிரம்மசாரி ஸ்ரீமத் ஆசார்யரிடம் சாஸ்திர அத்யயனத்திற்காக ஆஸ்ரயித்தார்கள். மஹா சந்நிதானம் இவருடைய வித்யை, ஆசாரம், நிஷ்டைகளை அநேக வருடங்கள் பரீக்ஷித்து இவரை உத்தமாதிகாரி சிஷ்யராக ஸ்ரீ சாரதா தேவியின் உத்திரவின்படி நியமிக்க நிச்சயித்தார்கள்.

ஆனந்த வருடம் ஸ்ரீ சாரதா நவராத்திரி உத்ஸவம் பூர்த்தியாகும் தினமான ஏகாதசி அன்று ஸ்ரீ சாரதாம்பாள் சந்நிதியில் மஹா ஜனங்களின் முன்னிலையில் தன்னுடைய தீர்மானத்தை பகிரங்கப்படுத்தினார்கள்.

இந்த சிஷ்ய ஸ்வீகார மஹோத்ஸவத்தை ஆனந்த ஆஸ்விஜ் கிருஷ்ண ஏகாதசி மற்றும் துவாதசி (10-11-74 & 11-11-74) ஞாயிற்றுக் கிழமை மற்றும் திங்கட்கிழமைகளில் நடத்தத் தீர்மானித் - திருக்கிறார்கள்.

அபிமான சிஷ்ய மகாஜனங்கள் சிருங்கேரிக்கு இது சமயம் வந்து இந்த உத்வைத்தில் கலந்துகொண்டு ஸ்ரீ சாரதா குருதர்சனங்களைச்செய்து சிரேயஸை அடையவேண்டுமெனவும் ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குருவின் ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமெனவும் மகா - ஜனங்களுக்கு விஸ்வாஸ பூர்வகமாகத் தெரிவிக்கிறோம்

சிருங்கேரி
1-11-74.

சங்கர ராவ்
ஸ்ரீ மடத்தின் நிர்வாகாதிகாரி.

* சிருங்கேரி ஸ்ரீ மடத்தில் அச்சிட்டுள்ள பத்திரிகையையும் நிகழ்ச்சி நிரலையும் அப்படியே பிரசுரித்துள்ளோம்.

பகுதி- 2
நிகழ்ச்சி நிரல்

ஸ்ரீ ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு மஹாஸமஸ்தானம், ஸ்ரீ சாரதா பீடம், சிருங்கேரி.

அடுத்த பட்ட வாரிசுக்கு சிஷ்ய ஸ்வீகார மஹோத்ஸவம்

ஸ்ரீமடத்தின் நிகழ்ச்சி நிரல்

**ஆனந்த ஸம்வத்ஸரம், ஆச்விஜ கிருஷ்ண ஏகாதசி,**
**ஞாயிறு, நவம்பர் 10, 1974.**

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru

| | | | |
|---|---|---|---|
| 1. | காலை | 8-00 | நித்ய கர்மானுஷ்டானத்திற்குப் பிறகு, பிரம்மசாரி, குருதர்சனம் செய்தல். |
| 2. | காலை | 8-15 | அஷ்டத்ரவ்ய மஹாகணபதி ஹோமத்தின் பூர்ணாஹுதி - (ஸ்ரீ சக்திவிநாயகர் ஆலயத்தில்) |
| 3. | காலை | 8-30 | ஸ்ரீ சாரதாதேவியை தர்சித்தல். |
| 4. | காலை | 8-35 | பகவான் ஸ்ரீ ஆதிசங்கரரை தர்சித்தல். |
| 5. | காலை | 8-40 | நரஸிம்மவனத்துக்கு வருகை. (அடுத்துவரும் நிகழ்ச்சிகள் நரஸிம்மவனத்தில் ஸமாதிக் கோயிலில் நடைபெறும்) |
| 6. | காலை | 9-00 | க்ருச்ராசரணம் முதலியன. |
| 7. | காலை | 9-10 | புண்யாஹவாசனம்,மாத்ருகா பூஜை. |
| 8. | காலை | 9-40 | அஷ்ட சிராத்தங்கள். |
| 9. | காலை | 11-00 | வபனம். |
| 10. | காலை | 11-30 | தண்டவஸ்த்ராதி ஸ்தாபனம், ஸந்யாஸ கிரஹணாங்கம். |
| 11. | நடுப்பகல் | 12-00 | ப்ரம்மாஞ்ஜலிகரணம் . |
| 12. | பிற்பகல் | 12-10 | ஸக்துப்ராசனாதி, உபவாஸ ஸங்கல்பம் முதலியன. |
| 13. | பிற்பகல் | 12-30 | ஸாவித்ரீ பிரவேசம். |
| 14.<br>15. | மாலை | 5-00 | அக்நிஸ்தாபனாதி, ப்ரம்மான்வாதானம்.<br>ஸாயம்ஸந்த்யா, ஜாகரணம் முதலியன. |

ஆனந்த ஸம்வத்ஸரம் ஆச்விஜ கிருஷ்ண துவாதசி,
திங்கள், நவம்பர், 11, 1974.

| | | | |
|---|---|---|---|
| 16. | விடியற் காலை | | ஸ்நான ஸந்த்யா நித்யகர்மாநுஷ்டானம், குரு தேவதா தர்சனம். (நரஸிம்மவனத்தில் உள்ள ஸமாதிக் கோயிலில்) |

| | | | |
|---|---|---|---|
| 17. | காலை | 7-00 | அக்நிஸ்தாபனாதி, புருஷ ஸூக்த ஹோமம், விரஜாஹோமம் முதலியன. |
| 18. | காலை | 8-15 | (துங்காநதியின் வலது கரையில்) ப்ரைஷோச்சாரணம், குரு அநுக்ரஹம் |

(கவனிக்க:- பக்தர்கள் இந்த நிகழ்ச்சியை துங்காநதியின் இடது கரையில் ஸந்த்யா மண்டபத்துக்கு எதிர்புறத்திலிருந்து தர்சிக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்விடத்தை தாலூகா ஆபீஸினின்றும் செல்லும் பாதையின் வழியே சென்று அடையலாம் )

| | | | |
|---|---|---|---|
| 19. | காலை | 8-50 | பஞ்சீகரணம் முதலியன (நரஸிம்மவன தில் பரமகுருவின் ஸமாதியில்) |
| 20. | காலை | 9-30 | (துங்கையின் இடதுகரை ஸ்நானகட்டத்தில் ) பர்யங்க சௌசம். |
| 21. | காலை | 10-15 | வ்யாக்யான ஸிம்மாஸனத்தில் யோக பட்டம் அளித்தல். |
| 22. | காலை | 10-45 | சாரதாகோவில் ஸந்நிதியில் காணிக்கை ஸமர்ப்பித்தல். |
| 23. | மாலை | 4-00 | மஹாஸந்நிதானம் அவர்களால் உபதேச பாஷணம், பண்டித ஸன்மானம். |
| 24. | இரவு | 9-00 | ஸ்ரீ சாரதாதேவி கோவிலில் தண்டி உதஸவம், தீபாராதனை . |
| 25. | இரவு | 10-30 | இரண்டு ஸந்நிதானங்களும் பல்லக்குகளில் நகர்வலம் |

தேதி : 9-11-74 B .சங்கர ராவ்,

முகாம்: சிருங்கேரி அட்மினிஸ்ட்ரேடர் (நிர்வாகஸ்தர்)
ஸ்ரீ சிருங்கேரி மடம்.

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru

குருப்யோ நம:

முதல் பாகம்

**பகுதி-1**

## சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பிடம்

சுமார் 12 நூற்றாண்டுகளுக்குமுன் காலடியில் பரமேச்வராம்சமாக அவதரித்த ஸ்ரீ சங்கர பகவத்பாதர் (ஆதி சங்கரர்) வேதாந்த ஸித்தாந்தமான அத்வைதக் கொள்கைகளையும், கர்ம-பக்தி-ஞான வழிகளையும் ஸ்தாபித்து அவை நிலைபெற்றிருப்பதற்காக பாரதத்தின் நான்கு திசைகளில் சிருங்ககிரி, புரி, பதரி, த்வாரகை ஆகிய நான்கு புண்ய ஸ்தலங்களில் சதுராம்னாய பீடங்களையும் அவைகளில் நான்கு குருபரம்பரையையும் ஸ்தாபித்தார். இந்நான்கு பீடங்களிலும் கர்னாடக பிரதேசத்தில் சிக்மகளூர் கோட்டத்தில் (ஜில்லாவில்) உள்ள சிருங்ககிரியில் ஸ்தாபித்த தக்ஷிணாம்னாய பீடமென்னும் ஸ்ரீ சாரதாபீடமே மிகச்சிறந்தது என்பது அனைவரும் அறிந்ததே. ஏனெனில் இங்குதான் ஸ்ரீசங்கரர், ஸ்ரீசாரதாம்பாளை பிரதிஷ்டை செய்து ஸுரேசுவரர், பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர் என்ற தமது நான்கு முக்கிய சிஷ்யர்களுடன் 12 வருஷகாலம் வாஸம் செய்து அவர்களுக்கு வேதாந்த சாஸ்திரங்களைப் பயிற்றுவித்து கடைசியில் தக்ஷிணாம்னாய பீடம் என்னும் ஸ்ரீ சாரதாபீடத்தை நிறுவினார். இப்பீடம் நிறுவப்பட்டது முதல் இன்றுவரை ஆதி சங்கரர் காட்டிய வழியில் பிராசீன வைதிக ஸம்பிரதாயங்களைக் கைக்கொண்டு உபதேசங்கள் மூலமும் மற்றும் பல வழிகளிலும் உலகத்திற்குப் பேருதவி புரிந்துவருகிறது.

இப்பிரஸித்தி வாய்ந்த தக்ஷிணாம்னாய ஸ்ரீ சாரதா பீடத்தை முதன் முதலாக அலங்கரித்த ஜகத்குரு, ஸ்ரீ சங்கரபகவத்பாதரின் முக்ய சிஷ்யரான ஸுரேச்வராசார்யார் ஆவார். அன்னார் பூர்வாஸ்ரமத்தில் (துறவறம் பூணுமுன், கிருஹஸ்தாஸ்ரமத்தில்) விஸ்வரூபர் என்ற திருநாமம்தாங்கி பூர்வ மீமாம்ஸையில் ஒப்பற்ற அறிவும் அளவற்ற பற்றும் உள்ளவராய், அதன் கொள்கைகளையே மேற்கொண்டிருந்தார். இவர், மக்கள் உய்வதற்கு ஆத்ம விமோசனத்துக்கு கர்மாதான் நேரடியான ஸாதனம் ஆகும்' என்று கூறிவந்தார். ஆனால் ஸ்ரீ பகவத்பாதாளுடைய உபதேசத்தின் விளைவாக 'சுத்த அத்வைத' கொள்கையைப் பின்பற்றி 'ஞானம்தான் மோக்ஷ ஸாதனம் 'என்று ஒரு பழுத்த அத்வைதி ஆனார். அவர் எழுதிய 'நைஷ்கர்ம்யஸித்தி 'என்ற கிரந்தத்தின் வாயிலாக 'தத்-த்வம்-அஸி' என்ற மஹாவாக்கியத்தின் கருத்தை உலகத் தாருக்கு விளக்கி, ஆத்மவிமோசனத்துக்கு ஸாதனம், ஞானமே தவிர கர்மா அல்ல என்று உறுதியுடன் கூறியுள்ளார்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru

ஸ்ரீ ஸுரேச்வராச்சார்யாரை அடுத்து இப்பிரசித்திவாய்ந்த ஸ்ரீசாரதா பீடத்தை அலங்கரித்த மஹான்கள் எல்லோருமே ஜீவன்முக்தர்கள்.ஸ்ரீ ஸுரேச்வராசார்யார் ஒருவர் நீங்கலாக ஏனைய அனைவரும் பிரும்மசரிய ஆஸ்ரமத்திலிருந்தே நேரடியாக ஸன்யாஸ ஆஸ்ரமத்தை மேற்கொண்டவர்கள். சரித்திரப் பலகணியின் வழியே நோக்குங்கால் இப்பீடாதிபதிகள் இளம்பிராயத்திலேயே 'அஷ்ட ஆத்ம குணங்கள்' என்று விவரிக்கப்பட்ட உன்னதமான நற்பண்பாடுகளுடன் விளங்கினர் என்பது தெளிவாகப் புலப்படும்



அப்பழுக்கில்லாத ஸதாசாரமும், வேத சாஸ்திரங்களில் பாண்டித்யமும், ஒருங்கே அமையப்பெற்ற, இப்பீடாதிபதிகள் உலக மக்களுடைய வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்ந்தனர்.

சிருங்கேரி பீடம் இந்தியாவின் தென்பகுதியிலுள்ள (தமிழ்நாடு, கர்னாடகம் ஆந்திரதேசம், கேரள ராஜ்யம்) சிஷ்யர்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டவும், அவர்களை உய்விக்கும் நோக்கத்துடனும், தக்ஷிணாம்னாய பீடம் என்ற பெயரால் நிறுவ பட்டது என்றாலும், சிருங்ககிரி ஸ்ரீசாரதா பீடாதிபதிகள் பாரதம் முழுவதுமே விஜய யாத்திரை செய்துவந்துள்ளனர். இப்பீடத்தின் சிஷ்யகோடிகள் இந்தியாவின் எல்லாப்பகுதிகளிலும் ஆங்காங்கு பரவலாக இருப்பதால், இத்தகைய விஜய யாத்திரைகள் அவசியமாயின. ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதர் அவர்கள் பாரததேச விஜய யாத்திரையினை மூன்று தடவைகள் மேற்கொண்டார் என்று வரலாறு கூறும்.


அவருக்குப் பிறகு தற்போது சிருங்ககிரியில் 35வது பீடாதிபதியாக விளங்கும் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் அகில இந்திய யாத்திராடனம் செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. மஹாஸந்நிதானம் அவர்கள் தமது விஜய யாத்திரையின்போது, நேபாளம்,கேதாரம், பதரி முதலிய இடங்களுக்கு சென்று ஆங்காங்கு புதிய கிளை மடங்களை நிறுவியும், பழைய மடங்களைப் புதுப்பித்தும் பிரசித்திபெற்றுள்ளார்.

சிருங்ககிரி பீடம் சம்பந்தப்பட்ட வரையில் இப்பீடத்தை வகிக்கும் அதிபதி, அவருக்குப்பிறகு பட்டத்தை ஏற்க வேண்டியவரை, தன் இஷ்டப்படி நியமிப்பதில்லை, அங்கு கோயில் கொண்டுள்ள அன்னை ஸ்ரீ சாரதா தேவியின்

அனுமதி பெற்றே, பட்டத்துக்குரிய வாரிசு நியமிக்கப்படவேண்டியது, என்ற ஸம்பிரதாயம் இருந்து வந்திருப்பதை சரித்திர வாயிலாக நாம் அறியலாம். ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர், ஒரு பாறையின் மேல் ஸ்ரீசக்ரத்தைப்பொறித்து ஸ்ரீசாரதா தேவியை பிரதிஷ்டை செய்தார். பின்னர் ஸ்ரீவித்யாரண்யர் காலத்தில் மூர்த்தி பிரதிஷ்டைசெய்து கோயில் எழுப்பப்பட்டது என்று வரலாறு கூறுகிறது. புகழ் நிரம்பிய இந்த ஸ்ரீசக்ரத்தின் ஸ்வயம்பிரகாசமும், அத்யுன்னத வித்யாபீடமாகிய ஸர்வக்ஞ பீடத்தின் மகிமையும் இந்தியாவில் மட்டுமின்றி மற்றும் இதர பிரதேசங்களிலும் வியாபித்து இருக்கின்றன ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் அநேக வெளிநாட்டினர் சிருங்ககிரி வந்து ஸ்ரீ ஜகத்குருவின் திவ்ய ஸந்நிதானத்தை நாடி தரிசனம் செய்து ஆன்மீக விஷயங்களில் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டிருக்கின்றனர்.

மேலே கூறப்பட்டபடி சிஷ்யரை வாரிசாக நியமிக்கும் முறையானது ஸ்ரீ ஸுரேச்வராச்சாரியார் காலந்தொட்டு இன்றுவரை நூற்றாண்டுகளாக யாதொரு மாறுதலுமின்றி கையாளப்பட்டு வருகிறது.

இப்போது சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடத்தை அலங்கரிக்கும் 35வது பீடாதிபதி ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள், பாரத தேசம் முழுவதும் யாத்திரை செய்திருக்கிறார். அவருக்கு இப்போது வயது 57.



32வது பட்டத்தை வகித்த ஸ்ரீநரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள், மைசூரில் இருந்து வந்த சிவஸ்வாமி என்ற 9 வயதேயுள்ள பாலகனை தேர்ந்தெடுத்து, ஆசிரமம் அருளி உபதேசம் செய்து 'ஸ்ரீஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹபாரதீ' என்ற யோக பட்டத்தைச் சூட்டி, தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் இச்சீடரையும் கூட்டிச் சென்று பயிற்சி அளித்தார். இவ்வாறே 34வது பட்டத்தை வகித்த ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளும் 1931ல், பதின்மூன்று ஆண்டுகளே நிறைந்த 'ஸ்ரீநிவாஸன்' என்ற பாலகனை தேர்ந்தெடுத்து அவருக்கு 'ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர்' என்ற யோக பட்டத்தைச் சூட்டி 24 ஆண்டுகள் அவருக்கு பயிற்சி அளித்துவந்தார். ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகள் 1954ல் விதேஹ கைவல்யம் அடைந்தபின் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் 35வது சிருங்கேரி ஜகத்குருவாக பட்டமேற்றார்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru

முந்தைய ஸந்நிதானங்கள் போலவே தற்போது ஸ்ரீ சாரதா பீடாதிபதியாக விளங்கும் இம்மஹாஸந்நிதானமும், வருங்காலத்தில் அவர்களுக்குப் பிறகு பீடாரோஹணம் செய்யத் தகுதியுள்ள ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு பயிற்சியளிக்க எண்ணம் கொண்டார் போலும் ! 1974ம் ஆண்டு நவராத்திரி சமயம் அன்னை ஸ்ரீ சாரதாம்பாளின் ஸந்நிதியில் செய்த தீவிரமான வந்தனை, வழிபாடுகள், இவற்றின் விளைவாக ஏகாதசி தினத்தில் கர்ப்பக்ருஹத்தினின்றும் வெளிப்போந்த மஹாஸந்நிதானம் அவர்கள், 'நாம் அடுத்துவரும் ஏகாதசி சமயம் சிஷ்ய ஸ்வீகரணம் செய்துகொள்ள ஸ்ரீசாரதாம்பாளின் ஆக்ஞையின் பேரில் தீர்மானித்துள்ளோம். அந்த சிஷ்யர் ஸ்ரீ ஸீதாராம ஆஞ்ஜநேயலு தான்,' என்று இந்த முக்கியமான விஷயத்தை எல்லோர் முன்னிலையிலும் பிரகடனம் செய்தார்கள். இது எதிர்பாராத விஷயம் இதுவரை மடத்தில் இருக்கும் எவருக்கும் இதைப்பற்றி ஒன்றும் தகவலே இல்லை. சிஷ்ய ஸ்வீகாரம் நடக்கப்போகிறது என்றே யாருக்கும் தெரியாது.

அடுத்த 15 நாட்கள் சிருங்ககிரியில் ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தின் திட்டத்தை நிறைவேற்ற தீவிரமான ஏற்பாடுகள் செய்வதில் கழிந்தன. விரிவான முறையில் தனிப்பட்ட அழைப்புகள் விடுக்கப் போதுமான சாவகாசம் இல்லை. அப்படியும் மடத்தின் ஏராளமான சிஷ்யகோடிகள் பாரதத்தின் நான்கு திசைகளிலிருந்தும் இந்த வைபவத்திற்காக சிருங்ககிரிக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அப்படியே ஏராளமான சிஷ்யகோடிகள் திரண்டு வந்து சேர்ந்தனர்.

1974ம் ஆண்டு நவம்பர் 11ம் தேதியன்று சிருங்ககிரி பீடத்தில் 35வது பட்டத்தை வகிக்கும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள், அவர்கள், குண்டூர் ஜில்லாவிலிருந்து, சிருங்கேரி வந்து, அவ்விடம் வித்யார்த்தியாக இருந்துவந்த பிரும்மசாரி ஸ்ரீ ஸீதாராம ஆஞ்ஜநேயலு என்பவருக்கு ஸந்நியாஸம் அளித்து 'பாரதீ தீர்த்தர்' என்ற யோக பட்டத்தை அருளினார். [இனி தற்சமயம் சிருங்ககிரி பீடத்தை அலங்கரிக்கும் ஸ்ரீ ஜகத்குருவை 'ஸ்ரீ மஹா ஸந்நிதானம்' என்றும், அடுத்து பட்டத்துக்கு நியமனம் செய்யப்பட்ட ஆசார்யாளை 'ஸ்ரீஸந்நிதானம்' என்றும் குறிப்பிடுவோம். நமது பரமாசார்யானைப்பற்றி குறிப்பிடும்போதும், எழுதும் போதும் இந்த முறையையே, எல்லா சிஷ்யர்களும் அனுஷ்டிக்கவேண்டுமென்பது பொதுவான வேண்டுகோள்.]


ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது பீடாதிபதியான ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் (அன்னார் ஆஸ்ரமம் ஏற்க்கும் முன்னரும், பிறகும்), ஸ்ரீஸந்நிதானம் அவர்கள் ஸந்நியாஸ ஆஸ்ரமத்தை ஸ்வீகரித்துக்கொள்ளுமுன், அவருடைய வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், 1974ம் வருஷம் நவம்பர் மாதம் 10, 11ம் தேதிகளில் நடந்தேறிய சம்பவங்களின் விவரங்கள், இவை யாவற்றையும் தொகுத்துள்ளதை அடுத்த பகுதிகளில் காணலாம்.

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru

பகுதி-2

## ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள்
## (ஸ்ரீ மஹாஸன்னிதானம்)

பெங்களூரில் கௌண்டின்ய கோத்ரத்தைச்சேர்ந்த ஜோதிஷ, வேத வியுத்பன்னர்களுடைய வம்சத்தில் கைபு ராமா சாஸ்திரி -லக்ஷ்மி அம்மா என்ற தம்பதிகளுக்கு 13-11-1917ல் 'ஸ்ரீநிவாஸன்' என்ற திருக்குமாரன் அவதரித்தார். ஸ்ரீராமா சாஸ்திரிகளுடைய பிதாமஹர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளும், பிரபிதாமஹர், ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளும், கர்னாடக அரசாங்கத்தில் ஜில்லா நீதிபதிகளாக பணியாற்றியவர்கள். ஸ்ரீ கைபு ராமா சாஸ்திரிகளுக்கு மூன்று ஆண் குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் உண்டு. அவர்களில் 'ஸ்ரீநிவாஸன்' இரண்டாவது குழந்தை. இவர் ஆண் குழந்தைகளில் மூத்தவர். ஸ்ரீ கைபு ராமா சாஸ்திரிகள் பெங்களூரில் உள்ள உயர் நிலைப்பள்ளி ஒன்றில் ஆசிரியராக இருந்தார்.


ಶ್ರೀ ಶೃಂಗೇರಿ ಜಗದ್ಗುರು ಶ್ರೀ ಚಂದ್ರಶೇಖರಭಾರತಿ ಸ್ವಾಮಿಗಳವರು
ಮತ್ತು ತತ್ಕರಕಮಲಸಂಜಾತ ಶ್ರೀ ಅಭಿನವ ವಿದ್ಯಾತೀರ್ಥಸ್ವಾಮಿಗಳವರು

சிறு வயது முதற்கொண்டே 'ஸ்ரீநிவாஸன்' அஷ்ட ஆத்ம குணங்கள் என்று வர்ணிக்கப்படுகிற ஸத்யம், கருணை, தைர்யம், திடமான தெய்வ நம்பிக்கை, நேர்மை, சீலம், முதலியவற்றைக்கொண்டிருந்தார்.

1930ம் ஆண்டில் அப்போதைய சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீஸ்வாமிகள், தனக்குப்பின், பீடத்தை நிர்வகிக்கக்கூடிய தக்கதொரு சிஷ்யரை தேர்ந்தெடுக்க விரும்பினார். சிஷ்யரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு ஸந்நியாஸ ஆஸ்ரமத்தைக் கொடுத்து ஸ்ரீ மட நிர்வாகத்தை மேற்கொள்ள பயிற்சியளித்து, தான் யோக நிஷ்டையில் அதிகமாக ஈடுபட்டு, அந்தர்முகமாக இருக்கவேண்டுமென்பது அவரது அவா. அப்போது இருந்த கியாதி வாய்ந்த ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடம் ஸ்ரீஸந்நிதானம், ஜாதக ரீதியாக பரிவ்ராஜக யோகமுள்ள ஒரு சிறுவனை அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தார். ஸ்ரீ சாஸ்திரிகள் பெங்களூர் வந்தபோது கைபு ஸ்ரீ ராமா சாஸ்திரி என்பவருடைய குமாரன் ஸ்ரீநிவாஸனுடைய ஜாதகத்தில் அத்தகைய

யோகம் காணப்படுவதாய், ஸ்ரீ வெங்கடசுப்பா சாஸ்திரி என்ற பிரபல ஜோதிடர் மூலம் அறிந்தார். ஸ்ரீநிவாஸனும், தந்தை ராமா சாஸ்திரியும் பெங்களூரிலுள்ள சிருங்கேரி மடத்திற்கு அழைத்துவரப்பட்டனர். ஸ்ரீ கண்ட சாஸ்திரிகள் ஸ்ரீராமா சாஸ்திரிகளிடம் பேசி குடும்ப விஷயங்களைக்கேட்டுத் தெரிந்து கொண்டு, சிருங்ககிரியில் ஸ்ரீநிவாஸனுக்கு விரைவில் உபநயனம் நடந்தவேண்டும் என்று தீர்மானித்து, பையனை அழைத்துக்கொண்டு குடும்பத்துடன் சிருங்கேரிக்கு வரும்படி சொல்லிவிட்டு தான் சிருங்கேரிக்கு வந்து விபரங்களை ஸ்ரீ மஹா ஸந்நிதானத்திடம் தெரிவித்தார்.

ஸ்ரீநிவாஸன் பெங்களூரிலுள்ள முனிசிபல் உயர்நிலைப்பள்ளியிலும், பாலா பேட்டையிலுள்ள ஆரிய வித்யாசாலையிலும் 8வது வகுப்புவரை படித்தார். பிறகு சிருங்ககிரிக்கு 1930ல் அழைத்துச் செல்லப்பட்டார். ஸ்ரீசங்கர ஜயந்திக்கு மறுநாள் ஸ்ரீநிவாஸனுக்கு உபநயனம் முறைப்படி நடத்தேறியது. நான்காவது தினமாகிய தண்டோத்யாபனத்தன்று தந்தையும், தனயனும் துங்கைக்கு அக்கரையில் உள்ள நரஸிம்ஹ வனத்தில் வீற்றிருந்த ஸ்ரீ சந்திரசேகரபாரதி ஸ்வாமிகளுக்கு தமது பிரணமங்களை செலுத்துவதற்காகச் சென்றனர். ஸ்ரீ மஹாஸந்திதானம் சிறுவன் ஸ்ரீநிவாஸனைப் பார்த்த, 'நீ பெங்களூருக்குச் சென்று ஆங்கிலம் படித்து வைதிக சம்பிரதாயப்படி ஸந்த்யாவந்தனம், காயத்ரீ ஜபம் ஸமிதாதானம், ஆகியவற்றை செய்து, முறை பிறழந்து பிரும்மச்சாரியின் வாழ்க்கையை அனுஷ்டித்து வா,' என்று புத்திமதி கூறினார். ஸ்ரீதியாஸன், ஸ்ரீ மஹாஸந்திதானம் அவர்களிடம், 'நான் ஆங்கிலம் பயிலவோ, ஆங்கிலம் பயின்று அதைக்கொண்டு ஓர் உத்யோகம் பெறவோ விரும்பவில்லை. எனக்கு ஸம்ஸ்க்ருதம் படிக்கவேண்டும் என்ற பேரவா உள்ளது. ஸம்ஸ்க்குதம் பயில சிருங்ககிரியில் இருக்கவோ அல்லது சிதம்பரம் செல்லவோ விரும்புகிறேன்' என்றார்.

ஸ்ரீ ஜகந்குரு ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளின் ஹிருதயத்தை இந்த சிறுவனுடைய பேரவாவும், உன்னத லக்ஷ்யமும் தொடச்செய்தன. ஸ்ரீஸந்நிதானம் அவர்கள் சிறுவனை ஆசீர்வதித்து, சிருங்ககிரி மடத்திலுள்ள ஸத்வித்யா ஸஞ்ஜீவினி பாடசாலையில் சேர்ந்து ஸம்ஸ்கிருதம் பயில அனுமதி அளித்தார்.

இதன்பின் பதினோறு மாதங்கள் கழித்து ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகள். ஸ்ரீ சாரதா தேவியின் உத்தரவின் பேரில், ஸ்ரீ நிவாஸனுக்கு ஸந்நியாஸம் தரவேண்டும் என்று தீர்மானித்தார். சிறுவனுடைய பெற்றோர்களுக்கு ஸ்வாமிகளுடைய உத்தேசம் தெரியப்படுத்தப்பட்டது. அவர்களுடைய அனுமதியும் கோரப்பட்டது. ஸ்ரீநிவாஸனின் பெற்றோரின் சம்மதம், அதிலும் குறிப்பாக தாயாரின் பரிபூரண சம்மதம், கிடைத்தது.

ஸ்ரீநிவாஸனின் பெற்றோரும் இதர பந்துக்களும், சிருங்ககிரிக்கு அழைக்கப்பட்டு 22-5-1931 அன்று ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகள், ஸ்ரீநிவாஸனுக்கு ஸந்நியாஸ ஆச்ரமம் கொடுத்து, 'ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர்'

என்ற யோக பட்டத்தையும் அருளி, தனக்குப்பின் சிருங்ககிரி சாரதா பீடத்தை ஆரோஹணிக்கும் வாரிசு என்று பிரகடனம் செய்தார்.

ஸ்ரீ மஹாஸந்நிதானம், புதிய (பால ) ஸந்நிதானத்திற்கு, சிறிது காலம் வேதாந்தத்தின் அடிப்படை தத்துவங்களை உபதேசித்தார் ஸ்ரீஜகத்குருவின் ஆக்ஞையின்பேரில் வள்ளூர் *ஸ்ரீராமசந்திர சாஸ்திரிகளிடம் நியாயம், மீமாம்லை. ஸாஹித்யம் பயின்றார். ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்களிடம் வேதாந்தம் பயின்றார்.



{*இந்த ஸ்ரீராமச்சந்திர சாஸ்திரிகள் 34வது பீடாதிபதியாகிய ஸ்ரீசந்திரசேகர பாரதீ அவர்களிடம் வேதாந்த பாடம் படித்தவர். ஸ்ரீ சாஸ்திரிகளுடைய தகப்பனார்,வள்ளூர் ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் 33வது பீடாதிபதியாகிய ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்மபாரதீ அவர்களிடம் வேதாந்த பாடம் கற்று, பங்களூர் பாட சாலையில் அத்யாபகராக இருந்தார். ஸ்ரீ ராமசந்திர சாஸ்திரிகளும் பங்களூர் பாடசாலையில் அத்யாபகராக இருந்தார். }

ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளுக்கு ஏகாந்தத்தில் ப்ரஹ்ம த்யானத்தில் ஈடுபட்டிருக்கவேண்டுமென்ற தீவிர அபிலாஷை ஏற்பட்டது. ஸ்ரீ மட நிர்வாகத்தை ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகளிடம் ஒப்படைத்தார். அடிக்கடி அந்தர்முக நிலையை மேற்கொண்டார். இதுகாறும் அனுஷ்டித்து வந்திருந்த சீரிய வாழ்க்கையின் காரணமாக, ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமட நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் ஏற்று, செவ்வனே நடத்திவந்தார்.

அந்தர்முக நிலையிலும், ஸ்ரீ மஹாஸந்நிதானத்திற்கும், ஸந்நிதானத்திற்கும் தொடர்பு இருந்துவந்தது. 1954ம் ஆண்டில் ஸ்ரீமஹாஸ்வாமிகள் விதேஹ கைவல்யம் அடைந்தார். ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது பீடாதிபதியாக ஸர்வக்ஞ பீடத்தை ஆரோஹணித்தார்.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்